**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register) CC.944/2015
Sessions)

Deposition of witness for
(Prosecution P.W.21
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | பாண்டியம்மாள். | -- | |
| Husband's Name | முனீஸ்வரன் | Calling | |
| Village | கம்மாபட்டி | Religion | |
| Taluk | ஸ்ரீவில்லிபுத்தூர் | Age | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th Day of June 2026..

எதிரிகள் 1–3 மற்றும் 5, 6 ஆஜர் இல்லை. குவிமுச. பிரிவு. 317 ன் கீழ் மனுத்தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 7 ம் எதிரி இறந்துவிட்டதால் குற்றச்சாட்டு அற்றுவிட்டது. 4, 8 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 ராமலட்சுமி என்பவரைத் தெரியும். அவர் இராஜபாளையத்தில் உள்ள SMF என்ற நிறுவனத்தில் களப்பணியாளராக வேலை பார்த்து வந்தார். அவர் என்னிடம் 10 பேர் வீதம் நபர் ஒருவருக்கு ரூ.1000 வீதம் பணம் கட்டினால் ரூ.25,000 கடனாக ஒவ்வொருவருக்கும் தருவதாகச் சொல்லி என்னிடம் நபர்களைச் சேர்க்க சொன்னார். நான் அதன் பேரில் 10 பேரைச் சேர்த்து ஒவ்வொரு நபரிடமும் ரூ.1000 வீதம் மொத்தம் ரூ.10,000 பணத்தை அ.சா.1 ராமலட்சுமி என்பவரிடம் கொடுத்தேன். அவர் மறுநாள் மேற்படி பணத்தை டிடி எடுக்க வேண்டும் என்று சொல்லி என்னையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேட் பேங்கிற்கு சென்றார். டிடி எடுத்த பின்பு அதை மேற்படி SMF நிதி நிறுவனத்திற்கு சென்று மேற்படி டிடியை அங்கு கொடுத்தார். நான் வெளியில் உட்கார்ந்திருந்தேன். அவ்வாறு நான் கொடுத்து சுமார் 15 வருடங்கள் இருக்கும். மேற்படி நிறுவனத்தை யார் நடத்தி வந்தார்கள் எத்தனை பேர் வேலை பார்த்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. அ.சா.1 சொல்லியது போல் எங்களுக்கு லோன் எதுவும் எடுத்துத் தரவில்லை. வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி விட்டார். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இன்றைய தினம் அ.சா1. விடம் கொடுத்த பணத்தில் ரூ.5000 த்தை எனக்கு திருப்பி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2026.06.18 19:05:31 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**